بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 25/12/2020 அன்று இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔ بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ۬ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத் நிகழ்வு தொடர்பாக மிக முக்கியமான ஒரு விஷயத்தின்பால் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:-

“நீங்களும் சஹாபாவுக்கு ஒப்பானவர்களாவீர்கள். **எனவே நான், முஸ்லிம்கள் எவ்வாறு அழிவுக்குள்ளாயினர்? எந்தக் காரணிகள் அவர்களின் அழிவுக்குக் காரணமாயின? என்பவற்றை வரலாற்றிலிருந்து எடுத்துரைக்க விரும்புகிறேன். ஆக, நீங்கள் விழித்துக்கொள்ளுங்கள்! உங்களில் புதிதாக வந்திருப்பவர்களுக்கு மார்க்கக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யுங்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் எழுந்த குழப்பம் சஹாபாவினால் எழவில்லை. சஹாபா எழுப்பினர் என்று கூறுபவர்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தக் குழப்பத்தைத் தோற்றுவித்தவர்கள் சஹாபா கிடையாது. மாறாக, பிற்காலத்தில் வந்த மக்கள், எவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமை கிடைக்கப் பெறவில்லையோ; எவர்கள் அன்னாருடன் அமரவில்லையோ அவர்களே ஆவர்.** எனவே, நான் உங்கள் கவனத்தை இதன் பால் திருப்புகிறேன். குழப்பத்திலிருந்து தப்புவதற்கான வழியாக இதைக் கூறுகிறேன். (அப்பொழுது அன்னார் காதியானில் இருந்தார்கள்) **அதிகமாக காதியான் வாருங்கள். மீண்டும் மீண்டும் வாருங்கள். இவ்வாறு உங்கள் ஈமான் புத்துணர்ச்சி பெற்றிருக்கட்டும். உங்கள் இறையச்சம் அதிகரித்துக் கொண்டே இருக்கட்டும்.**”

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:- “இன்றைய நாட்களில் அல்லாஹ் நமக்கு M.T.A எனும் வசதியை வழங்கியுள்ளான். எனவே, தர்பிய்யத்துக்கு மிகவும் அவசியமானது என்னவெனில், ஹஸ்ரத் வாக்களிக்கபட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை சுயமாகவும் வாசியுங்கள்; அத்துடன் M.T.A - வோடும் தொடர்பு வையுங்கள். குறிப்பாக ஜுமுஆ பேருரைகளைக் கண்டிப்பாகக் கேட்டுவாருங்கள். இவ்வாறு கிலாஃபத்தோடு தொடர்பு நிலைத்திருக்கும்! சிறப்பாகிக் கொண்டே செல்லும்! அதிகரித்துக் கொண்டே செல்லும்!”

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்-: “ஒட்டகப் போர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு மத்தியில் ஹிஜ்ரி 36 ஆம் ஆண்டு நடைபெற்றது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களும் இருந்தனர்.” ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இது தொடர்பாகக் கூறுகிறார்கள்:-

“இந்தப் போரின் துவக்கத்திலேயே, ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் நாவிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு முன்னறிவிப்பைக் கேட்டுத் தனியாகிவிட்டார்கள். அவர்கள் தாம் ஹஸ்ரத் அலீ (ரலி)

அவர்களுடன் போரிடமாட்டார்கள் என்று சத்தியம் செய்தார்கள். மேலும், அவர்கள் தாம் முயற்சித்து எடுத்த முடிவில் தவறிழைத்து விட்டதாக ஒப்புக்கொண்டார்கள். மறுபுறம், ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும் தமது வஃபாத்துக்கு முன்னர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் பைஅத் செய்வதை ஒப்புக்கொண்டார்கள். ஆக, மற்ற சஹாபாவின் கருத்து வேறுபாடுகளுக்கு ஒட்டகப் போரின் போதே தீர்வு ஏற்பட்டு விட்டது. ஆனால், ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்களின் கருத்து வேறுபாடு எஞ்சியிருந்தது. எதுவரையெனில், சிஃப்ஃபைன் போர் நடந்தது.

ஒட்டகப் போரின் அந்தச் சண்டையில் சஹாபாவின் கை ஒருபோதும் இருக்கவில்லை. மாறாக, இந்தத் தீங்கும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொன்றவர்களுடையதாகவே இருந்தது. ஒட்டகப் போர் முடிவுற்ற பிறகு, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்காக அனைத்து சவாரிகளையும் பயணத்திற்குத் தேவையான பொருட்களையும் ஆயத்தப்படுத்தினார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை வழியனுப்பி வைப்பதற்காகத் தாமே வருகை தந்தார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் செல்ல விரும்பியவர்களை அனுப்பி வைத்தார்கள். எந்நாளில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் புறப்பட இருந்தார்களோ, அன்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் வருகை தந்தார்கள். மேலும், அவர்களுக்காக எழுந்து நின்றார்கள். எல்லா மக்களும் இருக்கும் போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மக்களுக்கு முன் வந்து, ‘‘எனது மகன்களே! நாம் சிரமத்தைக் கொடுத்தும் வரம்பு மீறியும் ஒருவர் மற்றவரைக் கோபப்படுத்தி விட்டோம். இனி வருங்காலங்களில், நமது இந்தக் கருத்து வேறுபாடுகள் காரணமாக எவரும் ஒருவர் மற்றவர் மீது வரம்பு மீறக் கூடாது. இறைவன் மீதாணையாக! எனக்கும் ஹஸ்ரத் அலீக்கும் நடுவில், ஆணுக்கும் அவருடைய மனைவியின் உறவினர்களுக்கும் நடுவில் பொதுவாக ஏற்படும் விஷயத்தைத் தவிர, ஆரம்பத்திலிருந்தே எப்பொழுதும் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை’’ என்று கூறினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ‘‘மக்களே! ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் நன்மையான மற்றும் உண்மையான விஷயத்தைக் கூறியிருக்கிறார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இம்மையிலும் மறுமையிலும் உங்களுடைய கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களின் தூய துணைவியாராவார்கள்’’ என்று கூறினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை வழியனுப்பி வைப்பதற்காகப் பல மைல்கள் உடன் சென்றார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தமது மகன்களுக்கு, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் செல்லுமாறும் ஒரு நாளுக்குப் பிறகு திரும்பி வருமாறும் ஆணையிட்டார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்-: சிஃப்ஃபைன் போர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கும் அமீர் முஆவியா (ரலி) அவர்களுக்கும் மத்தியில் ஹிஜ்ரி 37 ஆம் ஆண்டு நடந்தது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூஃபாவிலிருந்து படையை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். சிஃப்ஃபைன் சென்றடைந்ததும் அமீர் முஆவியா அவர்களின் தலைமையில் சிரியாவின் படை முன்னரே முகாமிட்டிருப்பதைக் கண்டார்கள். அவர்களின் ஒரு கூட்டம் ‘ஃபுராத்’ நதிக்கரை மீது ஆக்கிரமிப்பு செய்திருந்தனர். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ‘நாங்கள் சண்டையிட வரவில்லை; மாறாக, அமீர் முஆவியா அவர்களோடு உடன்பாடு செய்ய வந்துள்ளோம்’ என்று கூறினார்கள். எனினும், அமீர் முஆவியா அவர்கள் உடன்பாடு செய்ய விரும்பவில்லை. போர் ஹிஜ்ரி 37 ஆம் ஆண்டு ஸஃபர் மாதம் துவங்கியது. சிறிது காலம் வரை, நிச்சய தீர்மானமின்றி போர் நடந்து வந்த போது, அமீர் முஆவியா அவர்களின் தைரியம் குன்றி விட்டது. இந்த அபாயகரமான நிலையில், ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள், அவர்களுக்குத் திருக்குர்ஆனின் பிரதிகளை ஈட்டிகளின் முனையில் கட்டி, இந்த மறைக்கு ஏற்ப தீர்மானிக்கப்பட வேண்டும் என்று கூறுமாறு ஆலோசனை

வழங்கினார்கள். ஆக, அவ்வாறே செய்யப்பட்டது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் படையின் பெரும்பான்மை, ‘இரு பிரிவும் ஒரு நீதிபதியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்; அந்த நீதிபதிகள் இருவரும் இணைந்து திருக்குர்ஆனின் வழிகாட்டலுக்கு ஏற்ப ஒரு தீர்மானத்திற்கு வர வேண்டும்’ என்ற அமீர் முஆவியா அவர்களின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டது. வரலாற்று நூல்களில் இந்த நிகழ்வு ‘தஹ்கீம்’ எனப்படுகிறது. எவ்வாறிருப்பினும், சிரியாவைச் சார்ந்தவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்களை நியமனம் செய்தார்கள். ஒப்புதல் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட பிறகு, படைகள் கலைந்து சென்று விட்டன. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இந்த நிகழ்வு தொடர்பாகக் கூறுகிறார்கள்:-

“உண்மையில், இந்த நீதிபதிகள் நியமனம் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கொலை நிகழ்வுக்காக இருந்தது. திருக்குர்ஆனுக்கு ஏற்ப தீர்மானிக்கப்படும் என்ற நிபந்தனை இருந்தது. ஆனால், அம்ர் பின் ஆஸ் மற்றும் அபூ மூஸா அஷ்அரி ஆகிய இருவரும் ஆலோசித்து, ‘முதலில் நாம் இருவரையும் (அதாவது, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களையும் அமீர் முஆவியா அவர்களையும்) அவர்களின் தலைமையிலிருந்து பதவி நீக்கம் செய்வதே சிறந்ததாக இருக்கும்’ என்று தீர்மானித்தார்கள். எவ்வாறிருப்பினும், அவர்கள் இருவரும் அந்தத் தீர்ப்பை அறிவிப்பதற்காக ஒரு பொது சபையைக் கூட்டினார்கள். அம்ர் பின் ஆஸ் அவர்கள் அபூ மூஸா அஷ்அரி அவர்களிடம், ‘முதலில் நீங்கள் உங்கள் தீர்ப்பை அறிவித்துவிடுங்கள். பிறகு, நான் அறிவிப்பேன்’ என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூ மூஸா அவர்கள் தாம் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை கிலாஃபத்திலிருந்து பதவி நீக்கம் செய்வதாக அறிவித்துவிட்டார்கள். இதற்குப் பிறகு, ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்கள் எழுந்து, ‘அபூ மூஸா அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைப் பதவி நீக்கம் செய்து விட்டார்கள். நானும் அவர்களின் இந்த விஷயத்தில் ஒருமித்து, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை கிலாஃபத்திலிருந்து பதவி நீக்கம் செய்கிறேன். ஆனால், முஆவியா அவர்களை நான் பதவி நீக்கம் செய்யவில்லை; மாறாக, தலைமைப் பதவியிலேயே அவர்களை இருக்க வைக்கிறேன்’ என்று கூறினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ‘நீதிபதிகள் இந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்டிருக்கவுமில்லை; அவர்களின் இந்தத் தீர்ப்பு திருக்குர்ஆனின் எந்தக் கட்டளையின் அடிபடையிலுமில்லை; நான் இதை எந்நிலையிலும் ஏற்றுக் கொள்ளமாட்டேன்’ என்று கூறி இந்தத் தீர்ப்பை ஏற்க மறுத்துவிட்டார்கள். நீதிபதிகளை நியமிக்குமாறு அழுத்தம் கொடுத்த, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடைய, நயவஞ்சக இயல்பையுடைய தோழர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் இந்தக் காரணத்தை ஏற்காமல், பைஅத்திலிருந்து அகன்று **காரிஜ்கள் - வெளியேறிவர்கள்** என்று அழைக்கப்பட்டனர். அவர்கள், ‘கட்டாயமாகக் கட்டுப்பட வேண்டிய கலீஃபா யாருமில்லை; முஸ்லிம்களின் பெரும்பான்மையின் தீர்மானத்திற்கு ஏற்ப அமல் செய்யப்படும்; ஏனெனில், யாராவது ஒரு நபரைக் கட்டாயமாகக் கட்டுப்பட வேண்டிய அமீராக ஏற்றுக் கொள்வது ‘லா ஹுக்ம இல்லா லில்லாஹ்’ (அல்லாஹ்வைத் தவிர தீர்ப்பு அதிகாரம் யாருக்குமில்லை) என்பதற்கு முரணானதாகும்’ என்ற கொள்கையை மேற்கொண்டனர்.”

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:- நஹர்வான் போர் ஹிஜ்ரி 38 ஆம் ஆண்டு நடந்தது. அதில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கும் பைஅத்திலிருந்து வெளியேறிய மக்களுக்கும் மத்தியில் போர் நடந்தது. சிஃப்ஃபைன் போரில், ‘தஹ்கீம்’ விவகாரத்தில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களோடு அவர்களின் படையின் ஒரு குழு கருத்து வேறுபாடு கொண்டு, கிளர்ச்சி செய்தவாறு தனியாகி, **காரிஜ்கள் - வெளியேறியவர்கள்** என்று அழைக்கப்பட்டது. அந்த வெளியேறியவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் தவ்பா செய்யுமாறும் கிலாஃபத்திலிருந்து பதவி விலகுமாறும் கோரிக்கை விடுத்த போது,

அன்னார் தெளிவாக மறுத்துவிட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அமீர் முஆவியாவுக்கு எதிராக மீண்டும் சிரியா நாட்டை நோக்கி முன் செல்லும் ஏற்பாட்டில் மூழ்கியிருந்தபோது, வெளியேறியவர்கள் குழப்ப வேலைகளை ஆரம்பித்துவிட்டனர். இந்த சூழ்நிலையில், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஏறத்தாழ **65,000** பேரைக் கொண்ட படையை அழைத்துக் கொண்டு வெளியேறியவர்களோடு போரிடச் சென்றார்கள். அன்னார் நஹர்வான் பகுதியை அடைந்ததும் வெளியேறியவர்களுக்கு சமரச அழைப்பு விடுத்தார்கள். இதனால், **4000** பேரிருந்த வெளியேறியவர்களிலிருந்து **100** பேர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடன் இணைந்து கொண்டனர். ஒரு பெரும் எண்ணிக்கை கூஃபாவுக்குத் திரும்பிவிட்டது. **1800** பேர் மட்டும் வெளியேறிய அப்துல்லாஹ் பின் வஹப் தலைமையில் முன்னோக்கி வந்தனர். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் **65,000** பேர் கொண்ட படையுடன் போர் நடந்தது. அதில் வெளியேறியவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் படையிலிருந்து ஏழு பேர் ஷஹீதாகிவிட்டனர்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:- எவ்வாறிருப்பினும், இப்போது இந்தக் குறிப்பு தொடர்ந்து கொண்டிருக்கிறது; இனியும் தொடரும். இன்ஷா அல்லாஹ். இன்றும் நான் பாகிஸ்தான் மற்றும் அல்ஜஸாயிரின் அஹ்மதிகளுக்காக துஆவிற்காக கூறவிரும்புகிறேன். அல்ஜஸாயிர் குறித்து ஒரு மகிழ்ச்சியளிக்கக் கூடிய செய்தி இருக்கிறது. கடந்த நாட்களில், இரண்டு மூன்று நாட்களில் இருவேறு நீதிமன்றங்கள் பொய்யான வழக்கில் சிக்கியிருந்த பல அஹ்மதிகளை நிரபராதிகளாக்கியுள்ளன. பாகிஸ்தானின் சில அதிகாரிகளும் நீதிபதிகளும் நீதி தவறுகின்றனர். தமது அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் தமது உள்ளப் பகைமையையும் காழ்ப்புணர்ச்சியையும் வெளியேற்றிவிட்டு விவகாரங்களைப் பார்க்கக் கூடியவர்களாவதற்கு அல்லாஹ் அவர்களுக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! எவர்களின் சீர்திருத்தம் அல்லாஹ்வின் பார்வையில் நிர்ணயிக்கப் படவில்லையோ, அல்லாஹ் அவர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாட்டை விரைவில் செய்வானாக! அஹ்மதிகளுக்கு பாகிஸ்தானிலும் அமைதி மற்றும் நிம்மதிக்கான வழியை ஏற்படுத்துவானாக! பாகிஸ்தானைச் சேர்ந்த அஹ்மதிகள் குறிப்பாக நஃபில்கள் மற்றும் துஆக்களில் அழுத்தம் கொடுங்கள். அந்த துஆக்களில் رَبِّ كُلُّ شَیْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِیْ وَانْصُرْنِیْ وَارْحَمْنِیْ எனும் துஆவையும் ஓதுங்கள். اَللّٰهُمَّ اِنَّا نَجْعَلُكَ فِیْ نُحُوْرِهِمْ وَ نَعُوْذُبِكَ مِنْ شُرُوْرِهِمْ எனும் துஆவையும் அதிகமாக ஓதுங்கள். பாவமன்னிப்புக் கோருவதன் பாலும் கவனம் செலுத்துங்கள். ஸலவாத் ஓதுவதன் பாலும் கவனம் செலுத்துங்கள். இன்றைய நாட்களில் இதன் தேவை அதிகம் உள்ளது. நஃபில்களையும் நிறைவேற்றுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு நல்வாய்ப்பும் வழங்குவானாக! விரைவாக அங்குள்ள நிலைமைகளையும் சீர்படுத்துவானாக!

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் மதிப்பிற்குரிய ஹும்தா அப்பாஸ் சாஹிபா, மதிப்பிற்குரிய ரிஸ்வான் செய்யது நயீமீ சாஹிப், மதிப்பிற்குரிய மலிக் அலீ முஹம்மத் சாஹிப், மதிப்பிற்குரிய இஹ்ஸான் அஹ்மத் சாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய ரியாஸூத்தீன் ஷம்ஸ் சாஹிப் ஆகியோரின் நற்பண்புகளை எடுத்துரைத்தார்கள். அவர்களுக்காக மஃபிரத்துக்கான துஆ செய்தார்கள். தொழுகைகளுக்குப் பிறகு, அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழவைப்பேன் என்று கூறினார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِیَ لَهٗ

وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰی وَيَنْهٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْیِ يَعِظُكُمْ

لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னி)**